# PAPER-II
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ___________________________
   (Name) ______________________________
2. (Signature) ___________________________
   (Name) ______________________________

OMR Sheet No. : ...........................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |

(In figures as per admission card)

Roll No.__________________________________

(In words)

| D | 2 | 6 | 1 | 1 |
|---|---|---|---|---|

Time : 1 $^1/_4$ hours] [Maximum Marks : **100**

Number of Pages in this Booklet : **12** | Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.
   **Example :** (A) (B) ● (D)
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **Answer Sheet given inside the Paper I Booklet only.** If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the Answer Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and OMR Answer sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण :** (A) (B) ● (D)
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये उत्तर-पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप उत्तर-पुस्तिका पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं OMR उत्तर-पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई अंक काटे नहीं जाएँगे ।**

**TAMIL**
தமிழ்
**Paper-II**
தாள்-II

**Note** : This paper contains Fifty (50) objective type questions, each question carrying Two (2) marks. Attempt all of them.

**குறிப்பு** : இந்த வினாத்தாள் ஐம்பது **(50)** விடை தெரி வினாக்கள் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு (2) மதிப்பெண்கள். அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்க.

**1.** செம்மொழித் தமிழ் இலக்கண - இலக்கியங்களின் எண்ணிக்கை
(A) 39 (B) 40
(C) 41 (D) 42

**2.** நெடுந்தொகை என்பது
(A) பத்துப்பாட்டு (B) அகநானூறு
(C) எட்டுத்தொகை (D) பன்னிரு திருமுறை

**3.** முத்தொள்ளாயிரத்தின் யாப்பமைதி
(A) ஆசிரியப்பா (B) வெண்பா
(C) கலிப்பா (D) வஞ்சிப்பா

**4.** இறையனார் அகப்பொருளுக்கு உரை எழுதியவர்
(A) நக்கீரர் (B) நச்சினார்க்கினியர்
(C) பரிமேலழகர் (D) பேராசிரியர்

**5.** ஒரு மூலநூல் இயற்றி அதற்கு உரையும் வகுத்தவர்
(A) நாற்கவிராச நம்பி (B) புத்தமித்திரர்
(C) ஐயனாரிதனார் (D) அமிர்தசாகரர்

**6.** "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழிதருமிக்கு அருளினோன் காண்" - என்று பாடியவர்
(A) பரஞ்சோதி முனிவர் (B) பெரியாழ்வார்
(C) சேக்கிழார் (D) அப்பர்

**7.** தோலாமொழித் தேவர் இயற்றிய காவியம்
(A) உதய குமார காவியம் (B) நாக குமார காவியம்
(C) யசோதர காவியம் (D) சூளாமணி

8. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று
(A) பெருங்கதை (B) நீலகேசி
(C) குண்டலகேசி (D) நள வெண்பா

9. திருமந்திரம் உரைக்கும் தந்திரங்கள்
(A) 7 (B) 8
(C) 9 (D) 10

10. பராங்குசர் என்று அழைக்கப்படுபவர்
(A) பேயாழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) மதுரகவி ஆழ்வார்
(D) பெரியாழ்வார்

11. வச்சணந்தி மாலை என்பது
(A) பன்னிரு பாட்டியல் (B) சிதம்பரப் பாட்டியல்
(C) வெண்பாப் பாட்டியல் (D) நவநீதப் பாட்டியல்

12. வேத்தியல் கூத்து யாருக்கு உரியது ?
(A) அந்தணர்களுக்கு (B) அரசர்களுக்கு
(C) வணிகர்களுக்கு (D) வேளாளர்களுக்கு

13. தமிழின் முதல் வரலாற்றுப் புதினம்
(A) பார்த்திபன் கனவு (B) ஜல தீபம்
(C) மோகனாங்கி (D) மகரயாழ் மங்கை

14. 'சூரியப் பிறைகள்' என்ற கவிதைத் தொகுப்பு எந்த மரபு சார்ந்தது?
(A) புதுக்கவிதை (B) ஐக் கூ
(C) லிமரிக் (D) லிமைரைக் கூ

15. பழமொழி என்பதன் ஒரு பொருட் பன்மொழிகள்
I. முதுசொல் II. முதுமொழி
III. நெடுமொழி IV. பிசி
இவற்றுள்
(A) I, II,III சரி (B) I, III,IV சரி
(C) II,III, IV சரி (D) I, II,IV சரி

16. திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றியவை

I. குறவஞ்சி
II. உலா
III. பிள்ளைத் தமிழ்
IV. கோவை

இவற்றுள்

(A) II, III,IV சரி
(B) I, II,III சரி
(C) I,II, IV சரி
(D) I, III,IV சரி

17. <u>உறுதிக்கூற்று</u>: (உ) 'திருக்கயிலாய ஞான உலா' என்பது 'ஆதி உலா' எனப்படும்.

<u>காரணம்</u>: (கா) உலா இலக்கிய வகைகளுள் அது காலத்தால் முந்தையது.

(A) உ. சரியன்று; கா. சரி
(B) உ. கா. இரண்டும் சரி
(C) உ. சரி ; கா. சரியன்று
(D) உ. கா. இரண்டும் சரியல்ல

18. <u>உறுதிக்கூற்று</u>: (உ) சங்க காலம் 'வீரயுகக் காலம்' ஆகும்.

<u>காரணம்</u>: (கா) காதலும் வீரமும் அக்கால இலக்கியங்களின் பாடுபொருள்கள் ஆகும்.

(A) உ. கா.இரண்டும் சரியல்ல
(B) உ. கா. இரண்டும் சரி
(C) உ. சரி ; கா. சரியன்று
(D) உ. சரியன்று ; கா. சரி

19. <u>உறுதிக்கூற்று</u>: (உ) சம்பந்தரின் பதிகங்கள் 'திருக்கடைக்காப்பு' எனக் குறிப்பிடப்படுகின்றன.

<u>காரணம்</u>: (கா)அவர் 'திருக்கடைக் காப்பு' என்னும் நூலை இயற்றியவர்.

(A) உ. சரி; கா. சரியன்று
(B) உ. சரியன்று ; கா. சரி
(C) உ. கா. இரண்டும் சரி
(D) உ. கா. இரண்டும் சரியல்ல

20. <u>உறுதிக்கூற்று</u>: (உ) குமரகுருபரர் முருகப் பெருமானைத் தவிர வேறு கடவுள்களைப் பாடவில்லை

<u>காரணம்</u>: (கா) திருச்செந்தூர் முருகன் திருவருளால் பேசும் திறம் பெற்றவர்.

(A) கா. சரி; உ. சரியன்று
(B) உ. கா. இரண்டும் சரி
(C) உ.கா. இரண்டும் சரியல்ல
(D) கா. சரியன்று ; உ. சரி

21. _உறுதிக்கூற்று:_ (உ) பத்துப் பாட்டு நூல்கள் சங்க இலக்கியத் தொகை நூல்களுள் நீண்ட அடிகள் கொண்டவை
_காரணம்:_ (கா) பாடுவதற்கென்றே அவை இயற்றப்பட்டன.
(A) உ. சரி; கா. சரியன்று (B) உ. சரியன்று கா. சரி
(C) உ.கா. இரண்டும் சரி (D) உ. கா. இரண்டும் சரியல்ல

22. _உறுதிக்கூற்று:_ (உ) அகநானூற்றில் 'மணிமிடை பவளம்' என்று ஒரு பகுதி உண்டு
_காரணம்:_ (கா) மணியும் பவளமும் மிடைந்தாங்கு வடமொழியும் தமிழும் விரவிய பகுதி அது.
(A) உ. சரி; கா. சரியன்று (B) உ. கா. இரண்டும் சரி
(C) உ. கா.இரண்டும் சரியல்ல (D) கா. சரி ; உ. சரியன்று

23. _உறுதிக்கூற்று:_ (உ) வெ.இராமலிங்கம் பிள்ளை 'நாமக்கல்லார்' என அழைக்கப்படுகிறார்.
_காரணம்:_ (கா) பிறந்த ஊராலாய காரணப் பெயர் அது.
(A) உ. கா. இரண்டும் சரி (B) உ. கா. இரண்டும் சரியல்ல
(C) உ. சரி ; கா. சரியன்று (D) உ. சரியன்று ; கா. சரி

24. _உறுதிக்கூற்று:_ (உ) சமயங்களுக்கிடையே சமரசம் கண்டவர் திரு.வி.க.
_காரணம்:_ (கா) வள்ளலார் திருஅருட்பாவால் அவர் ஈர்க்கப்பட்டவர்.
(A) உ. கா. இரண்டும் சரி (B) உ. கா. இரண்டும் சரியல்ல
(C) உ. சரி ; கா. சரியன்று (D) உ. சரியன்று ; கா. சரி

25. _உறுதிக்கூற்று:_ (உ) பரிதிமாற் கலைஞர் ஒரு நாடக நூல் எழுதினார்
_காரணம்:_ (கா) அவர் நாடக நடிகராகவும் அறிஞராகவும் இருந்தவர்.
(A) உ. சரியன்று; கா. சரி (B) உ. கா. இரண்டும் சரி
(C) உ. சரி ; கா. சரியன்று (D) உ. கா. இரண்டும் சரியல்ல

26. _உறுதிக்கூற்று:_ (உ) செந்தொடை அமையப் பாடல் எழுதுவோர் மிகவும் குறைவு.
_காரணம்:_ (கா) அப்பாட்டில் எதுகை, மோனைத் தொடைகள் அமையா.
(A) உ. கா.இரண்டும் சரியல்ல (B) உ.சரி; கா. சரியன்று
(C) உ. ; கா. இரண்டும் சரி (D) உ. சரியன்று; கா. சரி

27. <u>உறுதிக்கூற்று</u>: (உ) புதுமைப்பித்தனின் இயற்பெயர் விருத்தாசலம் ஆகும்.
<u>காரணம்</u>: (கா) அவர் விருத்தாசலம் என்னும் ஊரில் பிறந்தவர்.
(A) உ. கா. இரண்டும் சரி (B) உ. கா. இரண்டும் சரியல்ல
(C) உ. சரி ; கா. சரியன்று (D) உ. சரியன்று; கா. சரி

<u>நிரல் படுத்துக.</u>
28. யுகங்கள் வரிசை முறை
(A) கிரேதம்,திரேதம்,கலி,துவாபரம்
(B) கிரேதம்,திரேதம்,துவாபரம், கலி
(C) கலி,திரேதம்,துவாபரம்,கிரேதம்
(D) துவாபரம்,கலி,திரேதம்,கிரேதம்

<u>நிரல் படுத்துக:</u>
29. நில ஆட்சிப் பிரிவுகள்
(A) கோட்டம்,ஊர்,கொற்றம்,நாடு,மண்டலம்
(B) மண்டலம்,ஊர்,நாடு,கொற்றம்,கோட்டம்
(C) ஊர்,கோட்டம்,கொற்றம்,நாடு,மண்டலம்
(D) ஊர்,நாடு,கொற்றம்,கோட்டம்,மண்டலம்

<u>நிரல் படுத்துக:</u>
30. வெகுளியின் நிலைக் களன்கள்
(A) குடிகோள்,அலை,கொலை,உறுப்பறை
(B) உறுப்பறை,குடிகோள்,அலை,கொலை
(C) உறுப்பறை,குடிகோள்,கொலை,அலை
(D) கொலை,உறுப்பறை,குடிகோள், அலை

<u>நிரல் படுத்துக:</u>
31. ஆழ்வார்கள் வரிசை முறை
(A) திருமழிசை,பொய்கை,பூதம்,பேய்
(B) பூதம்,பொய்கை,திருமழிசை,பேய்
(C) பேய்,பூதம்,திருமழிசை,பொய்கை
(D) பொய்கை,பூதம்,பேய்,திருமழிசை

<u>நிரல் படுத்துக:</u>
32. சமணர் கொள்கைகள் வரிசை முறை
(A) ஞானம்,காட்சி,ஒழுக்கம்
(B) காட்சி,ஞானம்,ஒழுக்கம்
(C) ஞானம்,ஒழுக்கம்,காட்சி
(D) காட்சி,ஒழுக்கம்,ஞானம்

நிரல் படுத்துக:

**33.** சதுரகராதியின் உட்பிரிவுகள் வரிசை முறை

(A) பொருள்,பெயர்,தொடை,தொகை

(B) தொடை,தொகை,பெயர்,பொருள்

(C) தொகை,தொடை,பொருள், பெயர்

(D) பெயர், பொருள்,தொகை,தொடை

நிரல் பொருத்துக:

**34.** அட்டமா சித்திகளில் முதல் நான்கு

(A) கரிமா,அணிமா,லகுமா,மகிமா

(B) அணிமா,மகிமா,லகுமா,கரிமா

(C) மகிமா,லகுமா,அணிமா,கரிமா

(D) அணிமா,லகுமா,மகிமா,கரிமா

நிரல் படுத்துக:

**35.** பிள்ளைத் தமிழின் முதல் நான்கு பருவங்கள்

(A) காப்பு,தால்,செங்கீரை,சப்பாணி

(B) காப்பு,தால்,சப்பாணி,செங்கீரை

(C) சப்பாணி,காப்பு,தால்,செங்கீரை

(D) செங்கீரை,காப்பு,தால்,சப்பாணி

நிரல் படுத்துக

**36.** ஐம்பூதங்கள் வரிசை முறை

(A) விசும்பு,வளி,நிலம்,தீ,நீர்

(B) நீர்,தீ,வளி,விசும்பு,நிலம்

(C) நிலம்,விசும்பு,வளி,தீ,நீர்

(D) வளி,விசும்பு,நிலம்,தீ,நீர்

பொருத்துக:

**37.**

| | | | |
|---|---|---|---|
| I. | நச்சினார்க்கினியர் | (1) | திருக்கோவையார் |
| II. | பரிமேலழகர் | (2) | கலித்தொகை |
| III. | காளிங்கர் | (3) | பரிபாடல் |
| IV. | பேராசிரியர் | (4) | திருக்குறள் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

பொருத்துக:

38. I. பாலை (1) இந்திரன்
II. முல்லை (2) வருணன்
III. மருதம் (3) திருமால்
IV. நெய்தல் (4) கொற்றவை

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

பொருத்துக:

39. I. போர்த்துகீசியர் (1) சீகன்பால்கு
II. இத்தாலியர் (2) போப்
III. செர்மானியர் (3) பெஸ்கி
IV. ஆங்கிலேயர் (4) ஹென்றிக்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

பொருத்துக:

40. I. பாரதியார் (1) குயில்
II. பாரதிதாசன் (2) முல்லை
III. கண்ணதாசன் (3) செந்தமிழ்
IV. இராகவையங்கார் (4) இந்தியா

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

பொருத்துக:

41. I. இலம்பகம் (1) கம்பராமாயணம்
II. படலம் (2) சீவக சிந்தாமணி
III. காதை (3) மகாபாரதம்
IV. சருக்கம் (4) மணிமேகலை

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

<u>பொருத்துக:</u>

**42.** I. இராமானுசக் கவிராயர் (1) பெஸ்கி

II. சுப்ரதீபக் கவிராயர் (2) குணவீர பண்டிதர்

III. மீனாட்சி சுந்தரம் பிள்ளை (3) போப்

IV. நேமிநாதர் (4) உ.வே.சா.

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

<u>பொருத்துக:</u>

**43.** I. சிந்தையின் நிறைவு (1) வீடு

II. நெஞ்சம் அடங்குதல் (2) நிறை

III. மறைபிறர் அறியாமை (3) செறிவு

IV. கூறியது மாறாமை (4) செல்வம்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

<u>பொருத்துக:</u>

**44.** I. மண் திணிந்தது (1) தீ

II. நிலன் ஏந்தியது (2) நிலம்

III. விசும்பு தைவருவது (3) விசும்பு

IV. வளி தலைஇயது (4) வளி

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

கீழ்வரும் உரைநடைப் பகுதியைப் படிக்க. அதனைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு உரிய விடை அளிக்க.

பாரதி புதிய அறம் பாட வந்த மறவன். பாரதியால் தமிழ் உயர்ந்ததும், தமிழால் பாரதி தகுதி பெற்றதும் இன்று யாவரும் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். பாரதி மக்கள் கவிஞர். மானுடம் பாட வந்த மாக்கவிஞர். புதுநெறி காட்டிய புலவன். தம்மைப் பின்பற்றித் தமிழ் வளர்க்க ஒரு பரம்பரையைத் தோற்றுவித்த உயர் கவிஞர். எண்ணத்தாலும் எழுத்தாலும் இந்தியச் சிந்தனைக்கு வளம் சேர்த்த மாபெரும் சிந்தனையாளர்.

பல்துறை அறிஞர், தொலை நோக்கினர், அறிவியல் பார்வை பெற்ற கவிஞானி. மெய்ஞ்ஞான, விஞ்ஞானங்களின் கூட்டுச் சேர்க்கையே அவரின் படைப்புகள். புதிய தமிழகத்தை உருவாக்கக் கனவு கண்ட கவிக்குயில். அக்குயிலின் குரலோசை வையத்தை மகிழ்விக்கிறது. சுதந்தரப் போரில் பாரதியாரின் பாடல்கள் உணர்ச்சி வெள்ளமாய், காட்டுத் தீயாய், சுதந்தரக் கனலாய், நாட்டுப் பற்றுச் சுடராய்த் தமிழ்நாட்டை வீறு கொள்ளச் செய்தன.

விடுதலைக்கு முன் பாரதிக்கு முழுமையான செம்பதிப்பு இல்லை. அது மிகப் பெரும் தவக்குறைவே ஆகும். விடுதலைப் போராட்ட நாளில் இவரின் பாடல்கள் துண்டுப் பிரசுரங்களாகவே வெளிவந்தன. சுதந்திரப் போரில் பாரதியின் பங்கு என்பது போல பாரதியைப் பரப்புவதில் பதிப்பாளரின் பங்கும் பெரியது. கவிஞரின் கவிதைகள் அனைத்தும் ஒரு சேர ஒரே தொகுதியாக - மக்கள் பதிப்பாக - மலிவுப் பதிப்பாகச் சக்தி வை.கோவிந்தன் வெளியிட்டார்கள்.

**45.** விடுதலைப் போராட்டக் காலத்தில் பாரதியாரின் பாடல்கள் எவ்வடிவில் வெளிவந்தன ?

(A) துண்டறிக்கை (B) துண்டுப் பிரகடனம்

(C) துண்டு வெளியீடு (D) துண்டுச் சீட்டு

46. கோவிந்தன் வெளியிட்டது

(I) மலிவுப் பதிப்பு (II) மக்கள் பதிப்பு

(III) செம்பதிப்பு (IV) ஆய்வுப் பதிப்பு

இவற்றுள்

(A) (I), (II) சரி (B) (II), (III) சரி

(C) (III), (IV) சரி (D) (I), (IV) சரி

47. பாரதி எவ்வாறு உருவகுக்கப் படுகிறார் ?

(A) கவிஞானி (B) கவிக்குயில்

(C) மக்கள் கவிஞர் (D) மாக்கவிஞர்

<u>பொருத்துக:</u>

48.

| | | | |
|---|---|---|---|
| I. | இந்தியச் சிந்தனைக்கு வளம் சேர்த்த | (1) | மறவன் |
| II. | அறிவியல் பார்வை பெற்ற | (2) | சிந்தனையாளர் |
| III. | புதுநெறி காட்டிய | (3) | கவிஞானி |
| IV. | அறம் பாட வந்த | (4) | புலவன் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

49. தமிழ்நாட்டை வீறுகொள்ளச் செய்யப் பாரதியின் பாடல்கள் எங்ஙனம் அமைந்தன ?

I. உணர்ச்சி வெள்ளம்

II. காட்டுத் தீ

III. சுதந்தரக் கனல்

IV. நாட்டுப் பற்றுச் சுடர்

இவற்றுள்

(A) I, II, III சரி

(B) I, II, IV சரி

(C) அனத்தும் தவறு

(D) அனைத்தும் சரி

<u>நிரல் படுத்துக:</u>

50. பாரதியாரின் பன்முகங்கள் முறை வரிசை

(A) கவிஞானி, பல்துறை அறிஞர்,தொலை நோக்கினர்

(B) கவிஞானி,தொலை நோக்கினர்,பல்துறை அறிஞர்

(C) பல்துறை அறிஞர், கவிஞானி,தொலை நோக்கினர்

(D) பல்துறை அறிஞர், தொலை நோக்கினர், கவிஞானி

**Space For Rough Work**